

உ

இறைவன் துணை

# வீரசைவப் பிரமாணம்.

இது

குகையூர்

சித்தநாதேச்சுரராதீனம்

பட்டத்து பெரியசாமி ஐயர் குமாரர்

**திரு. அடிகளாசிரியர்**

அவர்களால் ஆராய்ந்து பதிப்பிக்கப்பட்டது.



மறுவெளியீடு


**தமிழ்நாடு பசவசமிதி டிரஸ்ட்**

(பதிவுபெற்றது)

115, திருவெங்கடசாமி ரோடு (மேற்கு),

ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர் - 641002,

# மகாத்மா பசவேஸ்வரா நாணய வெளியீட்டு விழா




பாரத பிரதமர் மாண்புமிகு. மன்மோகன்சிங், நிதியமைச்சர் மாண்புமிகு. ப. சிதம்பரம்,
கர்நாடக முதலமைச்சர் மாண்புமிகு. H.D. குமாரசாமி, பசவசமிதி தலைவர். திரு. அரவிந்த் பி. ஜத்தி மற்றும்
பசவசமிதி டிரஸ்ட்டின் செயலாளர் திரு. பிரபுதேவா. ஜே. சிகிட்டேரி ஆகியோர்



உ

இறைவன் துணை

# வீரசைவப் பிரமாணம்.

இது

குகையூர்

சித்தநாதேச்சுரராதீனம்

பட்டத்து பெரியசாமி ஐயர் குமாரர்

**திரு. அடிகளாசிரியர்**

அவர்களால் ஆராய்ந்து பதிப்பிக்கப்பட்டது.

TAMIL NADU BASAVA SAMITHI

ஓம்



## தமிழ்நாடு பசவசமிதி டிரஸ்ட்

(பதிவுபெற்றது)

115, திருவெங்கடசாமி ரோடு (மேற்கு),

ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர் - 641002,

நூலின் பெயர் : வீரசைவப் பிரமாணம்.
நூல் ஆசிரியர் : திரு. அடிகளாசிரியர்
முதல்பதிப்பு : 1936
மறுவெளியீடு : 2007
வெளியிடுவோர் : தமிழ்நாடு பசவசமிதி டிரஸ்ட்
கோயம்புத்தூர் - 641 002.
விலை : ரூபாய். 10/-

# 'உரிமையுரை'

எனக்கு இலக்கண நூற்களை முதன் முதல் செவ்வையாகச் சொல்லித்தந்தவரும், சிறுமையுற்ற வீரசைவ சமயத்தை உயர்த்துவான் வேண்டி அரிய பெரிய தொண்டுகளைச்செய்து அதனால் சமயப்பற்றுடையார்கள் உள்ளத்திலே புகழப்பட்டுவருபவரும், சமய அறிவும் உலக நாகரிக அறிவுமில்லாத வீரசைவப் போலிகளால் இகழப்பட்டும் அவர்களை சீர்திருத்தற்காக தொண்டாற்றுபவரும் ஆகிய முசிறி, போர்டு உயர்தரப்பள்ளி, தமிழாசிரியர் உயர்திரு, வீ. குமார வீரைய்யர் அவர்கட்கு இந்நூலை உரியதாக்குகிறேன்.

இங்ஙனம் பணிவுள்ள,

குகையூர். திரு அடிகளாசிரியன்.

வடிவமைப்பு மற்றும் அச்சாக்கம்
அனுஷம் கிராபிக் மீடியா
கோயம்புத்தூர் - 641 041.

# ஆசிரியர் அணிந்துரை



எனது இளமைக்காலத்தில் அச்சாகாத ஓலைச் சுவடிகளைத் தேடிப்பெறுவேன். அந்த முறையில் சின்னசேலத்தில் " சிவனேசர் மடம் " என்கின்ற மேலமடத்தில் திரு. சின்னசாமி அய்யர் வீட்டில், ஓலைச்சுவடிகளைத் தேடினேன். அப்போது, " **வீரசைவப் பிரமாணம்** " என்கின்ற இந்த நூல் எனக்கு கிடைத்தது.

இதனைச் செப்பம் செய்து 1936ல் அச்சிட்டேன். இந்நூல் வீரசைவ தத்துவங்களைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறுகின்றது.

இதன் பிரதிகள் செலவழிந்துவிட்டபடியால் அடுத்த பதிப்பு வெளியிடவேண்டும் எனக் கருதியிருந்தேன். அதனைத் தமிழ்நாடு பசவசமிதியார் மேற்கொண்டு அச்சிடுகின்றனர். அவர்களுக்கு இட்டலிங்க, பிராணலிங்க, பாவலிங்க சொரூபமாக இருக்கும் சிவபெருமானுடைய திருவருள் கிடைக்க வேண்டும் என்று வாழ்வாங்கு வாழ்த்துகின்றேன்.

இப்படிக்கு

**திரு. அடிகளாசிரியர்**

# பதிப்புரை

## இந்நூல் மறுபதிப்பு வெளிவந்த வரலாறு.

கூளூர் நெடுமாமிடி மடத்தின் கிளைமடமான காஞ்சீ. ஸ்ரீ கரிபசவ தேசிகேந்திர காசா மடம், எண் 5, பஞ்சுப் பேட்டை, சின்னத் தெரு, காஞ்சீபுரத்தில் உள்ளது. அதற்கு ஓர் மடாதிபதியை தேர்வு செய்து அவருக்கு பட்டாதிகாரம் கொடுக்க தீர்மானிக்கப்பட்டது. அம்மடத்தின் பீடாதிபதி ஸ்ரீ ஸ்ரீ வீரபத்ர சென்னமல்ல தேசிகேந்திர மஹா ஸ்வாமிகள் அந்த நிகழ்ச்சியை நடத்திக் கொடுக்க குழு ஒன்று அமைத்தார். அதற்கு, பெங்களூரு திரு. G.R. குருமூர்த்தி மற்றும் காட்டேரி திரு. L. மாதப்பா ஆகியவர்களை ஒருங்கிணைப்பாளர்களாக தேர்வு செய்தார்

மேலும், இது சம்பந்தமாக திரு. G.R. குருமூர்த்தி மற்றும் திரு. L. மாதப்பா, திரு. M. ராதாகிருஷ்ணன் ஆகிய நாங்கள் காஞ்சீபுரம் மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு வீரசைவ அமைப்புகளையும், பெரியோர்களையும் சந்தித்து ஏற்பாடுகளை செய்துவிட்டு பெங்களூருக்கு திரும்பிக்கொண்டிருந்தோம். அப்போது, சின்ன சேலம் அருகினில் வந்த போது திரு. G.R. குருமூர்த்தி அவர்கள் இங்கிருந்து சிலமைல் தொலைவில் குகையூர் உள்ளது. அங்கு பெரும் வயதினரான அடிகளாசிரியர் என்னும் பெரியவர் வசித்து வருகிறார். அவர் ஏறக்குறைய 100 ஆண்டுகளை நெருங்கிக் கொண்டிருக்கிறார் அவரை தரிசித்து ஆசி பெற்றுச் செல்லலாமா எனக்கேட்டார், மற்றவர்கள் இசைவு தெரிவித்து அங்கிருந்து குகையூர் சென்று அப்பெரியவரை சந்திக்கும் பெரும் பாக்கியத்தை பெற்றோம்.

அவரை தரிசித்த பிறகு தான் அவர் யார் என்று எங்களுக்கு புரியலாயிற்று. அதோடு இந்நூலாசிரியருடன் பேசிக் கொண்டிருந்த போது அவரது நினைவாற்றல், புலமை, நுண்ணிய அறிவு கண்டு வியந்து போனோம். அப்போது, தங்களிடம் ஏதாவது பழைய நூல்கள் இருப்பின் அத்தகைய நூல்களை மீண்டும் பிரசுரித்து, வீரசைவ மக்களுக்கு கிடைக்கும் படி செய்யலாமே என்ற கோரிக்கையை வைத்தோம். அத்தகைய நூல்கள் அவரிடம் ஏராளம் இருப்பதைக் கண்டு ஆனந்தம்

அடைந்தோம். அவற்றை பதிப்பிக்க கேட்ட போது விருப்பத்துடனும், மனநிறைவுடனும் நான்கு தமிழ் நூல்களை தந்தார்கள், அவைகள் வருமாறு :

1. வசவ புராணம்
2. சித்தாந்த சிகாமணி
3. வீரசைவப் பிரமாணம்
4. வீரசைவ தத்துவ பிரகாசம்

இவைகளில் " **வீரசைவப் பிரமாணம்** " சிறிய கையடக்கமான நூலாக இருந்த காரணத்தாலும், குரு பட்டாதிகார நிகழ்ச்சிக்கு குறைந்த தினங்களே இருந்த காரணத்தாலும், இதனை முதலில் பதிப்பிக்க எண்ணம் கொண்டோம். இதன் விளைவு, இந்நூலை பதிப்பிக்கும் பணியை தமிழ் நாடு பசவ சமிதி ஏற்றுக்கொண்டது. அதன் பயனாகவே 70 ஆண்டுகளுக்குப் பின் மறுவெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது.

இதற்கு மூலகர்த்தாவாக இருந்து நூலை பதிப்பிக்க இசைவு தெரிவித்த திரு. அடிகளாசிரியர் அவர்களுக்கும், அவர்களை எங்களுக்கு அறிமுகப்படுத்திய திரு. G.R. குருமூர்த்தி அவர்களுக்கும், இதை பதிப்பிக்க ஆன செலவுகளை ஏற்றுக் கொண்ட கோவை ஹரிகிருஷ்ணா ஜீவல்லரி - ரத்தின வியாபாரியும், கொடைவள்ளலுமான திரு. M. ராதாகிருஷ்ணன் மற்றும் அவர்கள் குடும்பத்தார்க்கும், இதனை அக்கறையுடன் பதிப்பிக்கச் செய்த தமிழ்நாடு பசவசமிதியின் செயலாளர் திரு. L. மாதப்பா அவர்களுக்கும், இதனை குறுகிய காலத்தில் அச்சிட்டு தந்து உதவிய திரு. D. அன்னலிங்கப்பா அவர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழ்நாடு பசவ சமிதியின் தமிழ்ப் படைப்பாக இந்நூல் உங்கள் கைகளில் மலர்ந்துள்ளது. வீரசைவப்பெருமக்கள் இத்தகைய நூல்களை வாங்கி, படித்து, புரிந்து கொண்டு வீரசைவ நெறிகளை மேற்கொண்டு வாழ்ந்தால், இந்நூலினை பதிப்பித்ததன் பயனைப் பெற்றோம் எனக்கொள்ளலாம்.

இங்ஙனம்

*11.03.2007* **தமிழ்நாடு பசவசமிதி டிரஸ்ட்**

**கோயம்புத்தூர்**

# ‘முன்னுரை’

நமது தமிழ் நாட்டிலே பழங்காலத்தே வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் ‘தெய்வவுணர்ச்சி யுடையராயிருந்தார்’ என்பது பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தானும், இலக்கிய நூல்களாகிய திருக்குறள் முதலானவைகளானும் நன்கு தெரிந்துகொள்ளலாம். அவர்கள் நிலங்களை மலை, காடு, நன்செய், கடற்புறம், வெப்புநிலம் என்னும் ஐங்கூறாகப் பகுத்து ஒவ்வொரு நிலத்திற்கும் முறையே சேயோன், மால், வேந்து, புனல் வேந்து, காடுகிழாள் என்னும் பெயருடைய தெய்வங்களை உரியதாகக்கொண்டு கடவுள் வழிபாடு செய்து வந்தார்கள். இவைகளை ‘மாயோன்மேய’ என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தானும் அதன் உரையானும் நன்றாய் அறிதல் கூடும்.

பண்டைத் தமிழர்கள் இத்தெய்வங்களையன்றி சிவன் அல்லது இறைவன் என்னும் பெயருடன் ஓர் ஒப்பற்ற தெய்வத்தை வணங்கி வந்தாரென்பதும், அத்தெய்வத்தை மேற்கூறிய ஐந்து தெய்வங்களினும் மேலாக மதித்து வந்தாரென்பதும், புறநானூறு முதலிய கழக நூற்களால் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

ஆனால், சில ஆராய்ச்சியாளர், “சிவம் அல்லது இறையோனைப்பற்றித் தொல்காப்பியமென்னும் இலக்கண நூலில் யாதொன்றுங் கூறப்பெறாமையானும், கழக இலக்கியங்களில் மட்டும் கூறப்பெறுவதானும், ‘சிவம்’ என்பது ஆரியச்சொல்லாதலானும் இது ஆரியத் தெய்வமாகும்; ஆரியர்களுடைய வழக்க ஒழுக்கங்கள் நமது நாட்டிடைப் புகுந்த ஞான்று தமிழ் இலக்கியங்களில் ‘சிவம்’ இடம் பெற்றுவிட்டது” என்று கூறுகின்றனர். இது பொருந்தாது:

தொல்—பொருளதிகாரத்தே கடவுள் வாழ்த்தென்று 'கொடிநிலை' என்னுஞ் சூத்திரத்தே கூறியிருப்பது தென்றமிழ்ச் சிவத்தையே ஆகல் வேண்டும். என்னை? எனின், கழக இலக்கியங்களில் கடவுள் வாழ்த்தாகக் கூறப்பட்ட தெய்வங்கள் சிவமும், மாலும் ஆதலின், சிவமும் மாலுமே மேற்கூறிய இலக்கண விதிக்கு எடுத்துக்காட்டான கடவுள்களாம். அதிலும் மாலைத் திணைத்தெய்வமென்று வேறு சூத்திரங் கூறுவதால் 'சிவமே' கடவுளாகற்பாலது; இக்கருத்தே பற்றி மணிவாசகரும் *'கடவுளே போற்றி' என்று சிவத்தைக் கூறுகின்றார். ஆதலின், தொல்காப்பியத்தில் கூறப்பெறாத தெங்ஙனம்?

இலக்கியமின்றி இலக்கணமின்றாதலின், இலக்கண வழியிலும் பழைய இலக்கியங்களின் வழியே மிகவும் சால்புடைத்து; அங்ஙனமாகவே புறம், அகம் முதலிய பழைய இலக்கியங்களில் எல்லாத் தெய்வங்களுக்கும் முதன்மைபட 'சிவம்' கூறப் பெறுவதால் இது தமிழ்த்தெய்வ மல்லவோ!

கடவுளின் திருவுருவத்தை இத்தமிழ் நாட்டு மக்கள் தமது வெப்பு நாட்டிற்கியைய, அழல் வண்ணமாகக் கருதி வந்தாரென்பது, அவர்கள் கடவுட்கு வழங்கிவந்த அழல் வண்ணன், அந்திவண்ணன் என்னும் பெயர்கொண்டு அறிந்து கொள்ளலாம். அதுபோலவே, செம்மை நிறத்தைக் குறிக்கும் 'சிவப்பு' என்னுஞ் சொல்லால் 'சிவன் அல்லது சிவம்' என்றுங் கடவுளை வழங்கி வருவாராயினர். 'சிவப்பு' என்பது தமிழின் நால்வகைச் சொற்களுள், குறிப்பையும், பண்பையும் உணர்த்தும் உரிச்சொல்லின்பாற்படும்.

கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள (எசு)
நிறத்துரு வுணர்த்தற்கு முரிய வென்ப (எஎ)
(தொல்—சொல்—உரியியல்)

* திருவாசகம்- திருச்சதகம் 64

இங்ஙனம், வெகுளியையும் நிறத்துருவையும் உணர்த்துகின்ற 'சிவப்பு' என்னுஞ் சொல்லால் நிறத்தை மட்டுங் குறித்துக் கடவுளைச் 'சிவம்' என்று வழங்கிப் போந்தனர் பண்டைய தமிழ் மக்கள். ஆனால் இந்நாட்டில் வந்த ஆரிய மக்கள் தமிழருடன் பழகி அவர்தங் கொள்கைகளிற் பல கற்றுக்கொண்ட காலத்தே தமது சிறு தெய்வ வணக்கத்தை விடுத்து, சிவ வணக்கத்தைக் கற்றுக்கொள்வாராயினர். அங்ஙனம் கற்றுக்கொண்ட காலத்தே 'சிவம்' என்னுஞ் சொல்லை வெகுளிப் பொருட்டாக்கி, 'உருத்திரன்' என்று பெயர் தந்து, வெகுளியோடு கூடிய உருவத்தை உடையவராக சிவத்தை தமது ஆரியப்பாட்டில் கூறுவாராயினர். 'நமஸ்த்தே ருத்ரமந்யவ' (க) (ஸ்ரீருத்ரம்) இதன் பொருள் 'வணங்குகின்றேன் உருத்திரனே உமது கோபத்திற்கு'.

'சிவம்' என்பதற்கு வடமொழியாளர், மங்கலம், சாந்தம், சுகம், ஓர் அளவை, குறி முதலான பல பொருள் கூறுகின்றனரே யல்லாமல், வெகுளிப்பொருள் கூறிற்றிலர். ஆகவே, ஆரியர் சிவத்திற்கு 'உருத்திரன்' என்று பெயரிட்டதும், தமோ குணத்தை உரியதாக்கியதும், தமிழ் மொழியாளர் 'சிவப்பு' என்னுஞ் சொற்குக் கூறிய வெகுளிப் பொருளை நினைந்தா? வடமொழியாளர் 'சிவம்' என்னுஞ் சொற்குக்கூறிய மங்கலம் முதலிய பொருளை நினைந்தா?

அங்ஙன மன்று; சிவத்திற்கு 'உருத்திரன்' என்பது தான் முதற் பெயர்; அதற்கியையவே தமோகுணம் முதலியன கூறப்பட்டுள்ளது எனின், பல்லாயிரக்கணக்காக எல்லா மக்களும் 'உருத்திரன்' என்று மிகுதியும் வழங்காது சிவத்தைச் 'சிவம்' என்றே மிகுதியாக வழங்கி வருதலானும், 'சிவம்' என்பதே அன்பர்களால் கெண்டாடப்பட்ட 'மாமறை' யாக இருத்தலானும், சிவத்திற்கு உருத்திரன் என்பதோ முதற் பெயராகும்?

'கறுப்பு' என்பது கறுவன், கறுவு என்று மருவி வந்தாற் போன்று 'சிவப்பு' என்பது சிவன் சிவம் என்று மரீஇ வந்தது. ஆகலின், சிவம் வடசொல்லாதல் எங்ஙனம்?

மேலே, கடவுள் என்பது சிவமாதல் வேண்டும். தொல்காப்பியத்தில் கூறிய கடவுள் வணக்கம் என்பது சிவ வணக்கமே என்று கூறினீர்; அங்ஙனமாக, கடவுள் என்பது தானே சிவத்திற்கு முதற் பெயராகல் வேண்டும்; அங்ஙனமின்றி, 'நம:' என்னும் வடசொல்லுடன் புணர்த்தி, மந்திரமாக ஓதிவரும் 'சிவம்' என்னுஞ் சொல் எவ்வண்ணம் தமிழ்ச் சொல்லாய் இறைவனுக்கு முதற் பெயராகுமெனின், கூறுவோம்.

ஆரியர்கள், சிவவணக்கங்கொண்ட ஞான்று, 'கடவுள்' என்னும் முதற்பெயர், தமது பாட்டோடு இசைப்படுத்தலாகாமையான், தமது பாட்டோடு இசைப்படுத்தவரும் 'சிவம்' என்னுஞ் சொல்லையே வழங்குவாராயினர். வழங்கவே, பல ஆரியச் சொல்லும் அத்துடன் புணர்ச்சி பெறலாயிற்று. அந்தமுறையில் வணக்கம் என்று பொருள் படும் 'நம:' என்னும் ஆரியச் சொல்லையும் புணர்ப்பித்து, 'நமசிவாய, சிவாயநம' என்பாராயினர். அங்ஙனமாகவே, வடமொழியில்தான் மந்திரம் உண்டு என்று கூறி, தமிழ் மக்களை ஆரியர் ஏமாறச் செய்த காலத்தே, 'கடவுள்' என்னும் முதற்பெயர் மறைய அச்சிவம் என்னும் பெயரே முதற்பெயராயிற்று.

சிவநெறியைப் போதிக்கும் ஆகமங்களெல்லாம், தென்னாட்டிலேயே பிறந்தது; தென்னாட்டிலேயே மிகுதியாய்ப் பரவலாயிற்று. சிவன் கோயில்களெல்லாம் இந்நாட்டிலுள்ளனபோல் வடநாட்டிலில்லை. சிவாகமப் பயிற்சியும் அங்கே

மிகக் குறைவு. ஆதலின் முதன் முதல் பழந் தமிழ்மக்களால் காணப்பட்டது சிவவணக்கம் என்பதும், இந்நாட்டி லிருந்தே வடநாட்டிற்கும் அவ்வணக்கஞ் சென்றதென் பதும் நமக்குத் தெள்ளிதின் விளங்காநிற்கும். இக்கருத்தே பற்றியன்றே மணிவாசகரும்,

'தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி'

(திருவாசகம்–போற்றி.)

என்பாராயினர். அன்றியே,

குறிஞ்சிக்குரிய மலையிலுறைதல்; நீலமேனி வாலிழை யோடு உறைதல், வேடுருத்தாங்கல்; முல்லைக்குரிய பிறை, கொன்றைமான், ஆனேறு இவைகளைப் பெற்றிருத்தல்; மருதத்திற்குரிய நீரைச்சுமந்திருத்தல், கொக்கிறகணிதல் ஊடலுண்டாகக் கங்கையைக்கூடல்; நெய்தற்குரிய மீனெலும்பணி, ஆமையோட்டணிகளைத் தரித்தல், பாதவர் வேடந்தரித்தல்; பாலைக்குரிய அழலேந்துதல், துடிகொட் டல் முதலியன சிவத்திற்குரியனவாகத் தமிழ் நூல்கள் கூறு வதால், ஐந்திணைக்குஞ் சிறப்பாகச் 'சேயோன்' முதலிய தெய்வங்களைத் தமிழ் மக்கள் கொண்டாற்போன்று, ஐந்திணைக்கும் பொதுவாக, 'சிவம்' என்னும் முழுமுதற் கடவுளை அவர்கள் கொண்டவர்கள் போலும். இங்ஙனமே மணிவாசகரும்,

காட்டகத்து வேடன் கடலில் வலைவாணர்
நாட்டிற் பரிப்பாகன்.........(ந)' (பண்டாய நான் மறை–திருவாசகம்.) என்றும்,

அங்கட் கடுக்கைக்கு முல்லைப்புறவம் முறுவல் செய்யும்
பைங்கட் டலைக்குச் சுடலைக் களரி பருமணி சேர்

கங்கைக்கு வேலே அரவுக்குப் புற்று..............
திருவொற்றி யூரன் திருமுடியே *
என்று திருநாவுக்கரயரும் கூறுவாரார்யினர்.

இத்தகைய சிவத்தை அன்பர்கள் உருவமாகவும், அருவமாகவும் வணங்கி வந்திருக்கிறார்கள். "அருவமும் உருவமும் ஆனாய் போற்றி" என்றார் மணிவாசகரும்.

தெய்வ வணக்கஞ் செய்வோர் முதற்கண் உருவ வழி பாடாற்றி அதன்கண் திறம் பெற்ற பின்னரே அருவ வழிபாடு செய்தல் வேண்டுமென்பது ஆகமநெறி. மேற் குறித்த சிவத்தை அறிதலுக்காக, ஆன்றோர்களால் நிய மிக்கப்பட்ட உருவத்திற்கு, 'இறைவன்' என்று பழைய இலக்கியங்கள் பெயர்கூறும்.

நுதல்விழி நாட்டத் திறைவன் கோயிலும்
(ஊர்காண்காதை, சிலப்பதிகாரம்)

இறை என்பது இரேகை அல்லது அடையாளம் என்று பொருள்படும். வடமொழியாளர் சிவத்தைக் குறிக்கும் உருவத்திற்கு 'இலிங்கம்' என்றே பெயரிட்டிருத்தலால் ஆண்டும் அது குறி அல்லது அடையாளம் என்றே பொருள்படுகின்றது. 'இலிங்கம்' என்பதற்கு வடமொழி யாளர் பலபொருள் கூறுவதுபோல், இறைவன் என்பதற்கு எல்லாப் பொருளிலும் தங்கியிருப்பவன்; எல்லாப் பொருள் களையுங் கடந்தவன் என்றும் தென்மொழியாளர் கூறுவர்.

இச்சிவத்தைப் பொதுவான கோயில்களில் எழுந்தருளச் செய்து அந்தணர்களால் சிறப்பும் பூசனையும் நடப்பித்துக் கண்டு களித்தல் பொதுவான வணக்க முறையாகும்.

* திருவொற்றியூர்—10

அங்ஙனமன்றியே இறைவன் உருவத்தை ஆசிரியனின் அருளாற் பெற்றுத் தாமே நாள்தோறும் வழிபாடாற்றி வருதல் சிறப்பான வணக்க முறையாகும்.

சிறப்பான வணக்கமுறை இரண்டுவகைப்படும் :—

ஒன்று:—மேற்கூறிய இறைவன் அல்லது இலிங்கத்தை யாக்கையின் நல்லுறுப்புக்கள் ஒன்றிலே, இடையீடின்றித் தரித்துக்கொண்டு வழிபாட்டுக் காலத்தில் மட்டும் *கையின்கண் எழுந்தருளுவித்து வழிபடல்.

மற்றொன்று:—இறைவனை யாக்கையின்கண் தரியாது ஒரு பெட்டகத்திலே வைத்திருந்து வழிபாட்டுக்காலத்தில் வேறு ஒரு மணையில் எழுந்தருளுவித்து வழிபடல்.

இங்ஙனம் வழிபடுவோரில் முதல் நெறியாளர், "எனது யாக்கையில் உயிருள்ளவரை 'யாக்கைக்கு வேறாக இறைவனை விடேன்; விடின், எனது உயிரையே போக்கிக்கொள்வேன்" என்று, 'போர்க்குப் பின்னிடா வீரனைப்போல்' வீரங் கொண்டிருப்பதால் வீரசைவரென்றும்;

இரண்டாம் நெறியாளரோ, பெட்டகத்திலிருந்து இறைவன் தவறிவிடினும் ஆசிரியனிடம் கழுவாய் செய்து கொண்டு வேறொரு இறைவனைப் பெற்று வழிபாடு செய்பவராதலின் பொதுவாகச் சைவரென்றும் வழங்கப்படுவாராயினர். 'சைவம்' என்பதற்கு, 'சிவத்துடன் இயைதல்' என்று பொருள். மணிவாசகரும் வீரசைவரைக் குறித்து

---

* பாத்திலே பொன்றாய் உள்ளாய்ப் புறமாகி
வாத்தினுண் மாயவ னுயய னாகித்
தாத்தினுட் டான்பல தன்மைய னாகிக்
காத்தினுள் நின்று கழிவுசெய் தானே. (திருமூலர்)

"சிவனே! அடியாரும் உன்னை விடுதலில்லாதவர்; நீயும் அவர்கள் உடலை இல்லமாகக் கொண்டு வசித்தலை ஒழியாதவன்" என்னும் பொருள்பட,

..........................விடலில் அடியார்
உடலிலமே மன்னும் உத்தரகோச மங்கைக் கரசே
(13–நீத்தல்–திருவாசகம்)

என்பாராயினர்.

இதுவரை கூறிவந்த வரலாற்றால், சிவ வழிபாடு தமிழாதென்பதும், சைவர், வீரசைவர் என்பார் தமிழ்மக்களென்பதும் தெள்ளிதின் விளங்கும். இவருள், சைவரை விடுத்து வீரசைவரைப்பற்றி ஆராய்வாம்.

பஃறுளியாறும் பன்மலையடுக்கமும் குமரிக்கோடும் கொடுங்கடல் கொண்டஞான்று தென்னாட்டிருந்து எருமையூர்ப்பக்கமும் வடுக நாட்டினுஞ் சென்று குடியேறினவர்களில் பெரும்பாலர் வீரசைவரே. இவர்கள் குடியேறின பின் அங்கே வந்து பரவிய ஆரிய மொழியுடன் தங்கள் தமிழையுங் கலந்து தெலுங்கம் முதலிய மொழிகளை ஆக்கிக் கொண்டார்கள். இந்நாட்டிலே ஆங்கிலேயர்கள் வருகையால் தமிழ்நாகரீகந் தாழ்ந்து ஆங்கிலேய நாகரீகம் எவ்வண்ணம் பரவுகின்றதோ அதுபோல், அக்காலத்தே ஆரிய நாகரீகம் வடக்கண் இருந்து பரவிக்கொண்டு வந்ததனால் அங்கங்கேயிருந்த தமிழ்மக்களும் தங்கள் நாகரீகத்தில் பலவிடுத்து ஆரிய நாகரீகங்களைக் கொள்வாராயினர். அங்ஙனங் கொண்டாலும், தாங்கள் தொன்றுதொட்டுப் புரிந்துவரும் சிவ வழிபாட்டைக் கைவிட்டவரல்லர். ஆரியர்களது பூஷண் முதலிய தெய்வவணக்கங்களைக் கைக்கொண்டவருமல்லர். ஆனால் பல ஆரியப்பாட்டுக்களை சிவத்தின்மேல் இயற்றுவாராயினர். அப்பாட்டுக்களிற்பல ஆரிய வேதங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

வீரசைவர்கள் நிறைந்துள்ள தெலுங்கநாட்டிலேயுள்ள மகேந்திரமலையிற்றான் முதன் முதல் வீரசைவர்களாலும், சைவர்களாலும் சிவாகமங்கள் எழுதப்பெற்றன. இதை மணிவாசகரும்,

"மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியும்"

"மற்றவை தம்மை மகேந்திரத் திருந்து
உற்றவைம் முகங்க ளாற்பணித் தருளியும்"

(கீர்த்தி—திருவாசகம்.)

என்று கூறுவதால், ஆராய்ந்து அறிந்து கொள்ளுதல் கூடும். திரு கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் "மணிவாசகர் குறிப்பித்த 'மகேந்திரமலை' தென்னாட்டிற் றிகழ்ந்தோங்கிய பெருமணிமலையே" என்று கூறுகின்றார். ஆனால், மணிவாசகருக்கு முன்பே தென்னாடு கடல் கொண்ட காலத்தேயே மணிமலையுங் கடல் கொண்டதாகலின், அதற்கு 'மன்னும்' என்னும் அடைகொடுத்து மணிவாசகர் கூறியது எங்ஙனம் பொருந்தும்? அருள் நாவினர் பாட்டில் குற்றம் வாராதாகலின் 'மன்னுமாமலை மகேந்திரம்' வடதிசையின் கண்ணதே. மணிவாசகர் தென்னாட்டிற் பிறந்தவராயிருப்பினும் வடநாட்டிலுள்ள ஏகம்பம், அண்ணாமலை, கழுக்குன்றம் முதலிய தலங்களைக் கண்டுள்ளாராதலின் வடதிசையின் கண்ணுள்ள மகேந்திரத்தையும் அறிந்திருந்தாரென்பதும் உறுதி. அன்றியும், 'வடதிசைக்கயிலையில் இறைவனால் ஆகமங் கூறப் பட்டது' என்னும் புராணவரலாறும் உண்மையால் ஆகமங்கள் யாங் குறிப்பித்த இடத்தின்கண்ணரே தோன்றியுள்ளனவாம். அஃதன்றியே தெலுங்கம், கன்னடம் முதலிய நாட்டின்கண் நன்கு தெரிந்த வீரசைவ ஆசிரியராகிய இரேணுகர் முதலான ஆசிரியர்களின் வரலாறுகள் சுயம்பு,

சுப்பிரபோதம், முதலான சிவாகமங்களில் தெரிக்கப்பட்டுள் ளன வாதலின் அவ்வாகமங்கள் யாவும் அந்நாட்டிலேயே தோன்றியிருக்க வேண்டும்.

வீரசைவர்கள் பெரும்பாலும் ஆரியமொழிக் கலப்பி னால் தங்கள் தமிழை மறந்து ஆரிய மொழியிலேயே நூல் கள் இயற்றுவா ராயினர். அம்மொழியின்கண் எனக்குத் தெரிந்தவரையில் வீரசைவத்தைக் குறிப்பிடும் நூல்கள் வருமாறு.

வேதம்:— இருக்கு, யசுர்.

உபநிடதம்:—வேதாந்த சாரோப நிடதம், பத்தியோகோப நிடதம், நிர்லேபோப நிடதம், சிதம்பரோப நிடதம், சித்தாந்த சிகோப நிடதம், இலிங்க தாரணோப நிடதம், பிரசாத சாபலோப நிடகம், வீரலிங்யோப நிடதம்.

ஆகமம்:— சூட்சுமாகமம், வாதுளாகமம், பாரமேச்சு ராகமம், வீராகமம், காமிகாகமம், சுப்பிர போதாகமம்,சுவாயம்பாகமம், காரணாகமம்.

புராணம்:— சிவபுராணம், சௌரபுராணம், காந்தபுராணம், பத்மபுராணம், இலிங்கபுராணம்.

இதிகாசம்:- மகாபாரதம்.

பாடியம்:— சிகாபாடியம், (பிரமசூத்திரத்திற்கு விசிட்டாத் துவிதமாக) நீலகண்டபாடியம், (மகா நாராயணோப நிடதத்திற்கு சிருட்டபண்டிதா ராத்திரியர் இயற்றிய) பாடியம்.

தமிழ் மொழியில் வீரசைவத்தைக் குறிப்பிடும் நூல்கள்.

திரிகடுகம், குண்டலகேசி, திருவாசகம், திருமந்திரம், வசவபுராணம், பிரபுலிங்கலீலை, சித்தாந்தசிகாமணி, சிவப்பிரகாசர் பிரபந்தம், சிவப்பிரகாச விகாசம், நிட்டானுபூதி, அத்துவிதவெண்பா, சடுத்தலம் முதலியன.

தமிழ் நாட்டிலே வீரசைவ சமயத்தவராக விளங்கியவர்கள்.

அமிர்தபாணி ஐயர் (நல்லாற்றூர்)
ஒட்டக்கூத்தர் (மணவை)
கச்சபாலய தேவர் (காஞ்சி)
கண்ணுடைய வள்ளல்
கந்தப்பையர் (தணிகை)
சம்பல தேவர் (சின்ன சேலம்)
கருணைப்பிரகாசர் (நல்லாற்றூர்)
கல்லாடர்
கனகசபை ஐயர் (சுவாமிமலை)
குகைநமசிவாயர் (அருணை)
குமாரசாமி தேசிகர் (காஞ்சி)
குமாரதேவர் (பழமலை)
குருநமசிவாயர் (தில்லை)
குழந்தைவேலாரியர்
சங்குகன்னர் (பிரமபுரம்)
சண்முக ஞானி (கோவலூர்)
சரவணப்பெருமாளையர் (தணிகை)
சந்தான மனோலயர்
சாந்தலிங்கர் பேரூர்
சாரங்கதேவர் (குடந்தை)
சிதம்பர சித்தர் (பட்டாம்பாக்கம்)
சிதம்பர சுவாமிகள் (போரூர்)
சித்தநாதேச்சுரர் (குகையூர்)
சிவப்பிரகாசர் (துறையூர்)
சிவப்பிரகாசர் (நல்லாற்றூர்)
சிவஞான பாலையர் (மயிலம்)
சென்னவசவ தேவர் (துறைமங்கலம்)
சோமேசர்
சோலைச்சிவயோகி
ஞானாம்பிகை (பேரூர்)
திருவள்ளுவர் (மயிலை)
நக்கீரர் (மதுரை)
நமச்சிவாயதேவர்
நாகலிங்க முனிவர் (சதாசிவபுரம்)
பச்சை கந்தர் (தில்லை)
பால்குரிகி சோமநாதஆராத்திரியர்
பவழப்பாடிச்சித்தர் (பவழப்பாடி)
மல்லேசர்
மழவை மகாலிங்கையர்
மாணிக்கவாசகர் (வாதவூர்)
விசாகப்பெருமாளையர் (தணிகை)
வேலையர் (பெருமத்தூர்)

இங்ஙனமாக, பலநூற்களாலும் பல அறிஞர்களாலும் ஓதப்பட்டும் மேற்கொள்ளப்பட்டும் வந்துள்ள உயர்ந்த

கற்புநெறிவாய்ந்த வீரசைவ சித்தாந்த நெறியை, ஒரு சில போலிச்சைவர்கள் பொறாமை காரணமாக அகப்புறச் சமயங்களின் பாலதாகிய 'ஐக்கியவாதசைவம்' என்று குறித் திகழ்ந்துள்ளார்கள். என்னே இவர்களின் மதி!

சிவஞான போத வசனாலங்கார தீபம், பக்கம் ௰௬௨ ல், "ஐக்கியவாத சைவர், வேதசிவாகமம் இரண்டையும் சிறப்பு வகையாற் பிரமாணமாகக் கொண்டு அவற்றில் விலக்கியவற்றை நீக்கி விதிக்கப்பட்டவற்றைச் செய்வாராயினும், எல்லாக் கேட்டிற்கும் காரணமாகிய ஆணவமலம் ஒன்று உளது என்பதைப் பொருட் படுத்தாமையானும், அதனை உண்டு என்று கூறும் சிவாகமங்களை இகழ்தலானும்...... 'அகப்புறச்சமயம்' என வேறு வைத்து எண்ணப்பட்டது." என்று காணப்படுகின்றது. இஃதை ஆராய்வாம்.

வீரசைவ சித்தாந்த சமயநூலாகிய 'சித்தாந்த சிகாமணியில்' சீவான்ம இலக்கணங் கூறுமிடத்து,

"ஆணவத் தடையி னாலோ ரணுவென வாதி கன்ம
நாணுற வசைக்கப் பட்டு நவிலினுண் ணியனா மான்மா"

என்றும், பரமான்ம இலக்கணங் கூறுமிடத்து,

"பரமமெய்ஞ் ஞானந் தன்னாற் பவநெறிக் கேது வாகு
மிருண்மல மகலு மாற்றாற் பரமனே டிருக்கும் பற்று
வுரமுறு பரமான் மாவென் றுரைத்திடப் படுவன்"

என்றும், பஞ்சாக்கர இலக்கணங் கூறுமிடத்து,

"முத்த னாகிநின் றநாதியே மும்மலங் களினுஞ்
சுத்த னாதலின்...............சிவமென வுரைப்பர்"

என்றும்,

கூறப்பட்டுள்ளதால், 'ஆணவமலம்' ஒன்றுளது என்பதைப் பொருட்படுத்தாமை எங்ஙனம்? எந்த வீரசைவ சித்தாந்த

நூற்களில், 'ஆணவமலம்' உண்டு என்று கூறும் சிவாகமங்கள் இகழப்பட்டுள்ளன? அந்தோ! இங்ஙனம் ஓர் உயர்ந்த வீரசைவ சமயத்தை, ஐக்கியவாத சைவம் என்னும் ஆராய்ச்சி உணர்வில்லார்க்கு இறைவன்றானும் அருள்புரிவனோ!

வீரசைவர்களாயுள்ளோர் சைவசமயத்தையும், வீர சைவ சமயத்தையும் விளக்கமுறுத்தி வருகின்றார்கள். சைவர்களோ தங்கலம் பிடித்தவர்களாய், தம்மோடு தோழமைப் பட்ட வீரசைவ சமயத்தை இகழ்ந்தும், தமது சைவ சமயத்தைப் புகழ்ந்தும் வருகின்றார்கள். இவர்களில் யாவர் அறிவுடையவரென்பதை, அறிவுடையவர்களே கூறுங்கள்!

உண்மை உணராத 'போலிச்சைவர்' தமது மனக் காழ்ப்பால் எவ்வாறு நமது சமயத்தை இகழ்ந்தாலும் உண்மைச் சைவராகிய, மறைமலை யடிகளார், கா. சுப்பிரமணியப் பிள்ளை முதலான பெரியோர்கள் அங்ஙனம் இகழா ராதலின் அவர்கள் இகழ்வதை பொருட்படுத்தாது விடுவே மாக. இவை நிற்க,

தமிழ் நாட்டிலே, வீரசைவ சமயத்தவராயுள்ளவர்களெல்லாம் சமய உணர்ச்சியற்று உறங்குகின்றார்கள். மடத்தின் தலைவர்களெல்லாம் கல்வியறிவு அற்றவர்களாயும் காலத்தின் அருமையுணர்ந்து விரைந்து செய்வனவற்றைச் செய்யாதவர்களாயும் உள்ளனர். எதைஆக்க 'மடம்' அமைக்கப்பட்டதோ அச்செயலைச் சிறிதுஞ் செய்யாது, எதைப்போக்க 'மடம்' அமைக்கப்பட்டதோ அச்செயலைத் தமதாகக்கொண்டு வலிமுகங்களாயுள்ளார்கள் அவர்களென்றால் எங்ஙனம் சமயம் பெருகும்?

சமூகத்தின் கற்றவர்களோ சமய வுணர்ச்சியின்றி வயிற்றுணர்ச்சி மிக்கு ஐயறிவோடு கூடிய விலங்கினங்களா

யுள்ளனர். சமூக வாலிபர்களோ கல்வியில் விருப்பமில்லாத கசடர்களாய் கல்வியில் விருப்பமுள்ள சுமடர்களா யுள்ளனர். சிறிது கற்கும் வாலிபரோ, மனஞ்சென்ற நெறியே அறிவைச் செலுத்தி மனத்திற்குத் தலைமையும் அறிவிற்கு அடிமையும் தந்தவர்களா யிருக்கின்றனர். பெண்மணிகளோ கல்வியும், சமய அறிவும் பெறாமல் வீணுரை பிதற்றி ஆட்டின் கழுத்திடு மணியாய் விளங்கு கின்றனர்.

இவ்வாறே நாம் எல்லோருமிருப்பின் நமது சமயமும் நாமும் எந்த நிலைமையில் விளங்குவோ மென்பதை எண்ணிப் பார்ப்பவர் ஒருவரும் நமது சமூகத்திலில்லையே! "சமய வுணர்ச்சியைப் பெற்றுக்கொள்ளத்தக்க நூல்கள், ஒன்றுந் தமிழிலில்லையே! எங்ஙனம் அதைப்பெற்றுக்கொள்ளக் கூடும்!" என்று சிலர் எம்மைக்கேட்டனர். அஃது உண் மையே; எனினும், சிறிது முயற்சிப்பட்டால் கற்ற நம்மவரது பழம் வீட்டில் எத்தனையோ சமய நூற்களை ஏட்டுச்சுவடியில் பெறலாமே! அங்ஙனம் பெற்ற நூல்களை ஆராய்ந்து பதிப் பித்தால் படிப்பவர்களுக்கு உபகாரமாயிருக்குமே! அவ்வாறின்றி, சமய நூலில்லையே! சமய நூலில்லையே! என்று கூவிக்கொண்டிருப்பின் அது எவ்வாறு வரும்?

சிலநாட்களின் முன்பு, சின்னசேலத்தில் சிலவீரசைவப் பெரியார்களின் இல்லத்திலே ஏடுதேடியபோது 'வீரசைவப் பிரமாணம்' என்று முகப்பில் எழுதியுள்ள சுவடியொன்று மேலமடம் சின்னசாமி ஐயரவர்கள் வீட்டிலிருந்து எமக்குக் கிடைத்தது. அதைப் படித்துப்பார்த்ததில் வீரசைவ சித்தாந்த சமய நுண்பொருள்களை உரை நடையில் எழுதப் பட்டிருந்ததாகத் தெரிந்தேன். * இதைச் செப்பஞ்செய்து

* ஆக்கியோர் பெயர் தெரியவில்லை.

பதிப்பித்தால் எல்லோர்க்கும் பயன்படுமென்று எண்ணி பதிப்பிக்கலாயினேன். அங்ஙனம் பதிப்பிக்க ஆரம்பிக்குங்கால் வீரசைவ சமயத்தைப்பற்றி எனது மனதில் தோன்றிய ஆராய்ச்சிக் குறிப்புக்களை எழுதினால் ஆராய்ச்சி உலகத்திற்குச் சிறிது பயன்படுமென்று எண்ணி ஏதோ எழுதியுள்ளேன். இதைக்கண்ணுறும் அறிவுடையவர்கள் தமக்குத்தோன்றுங் குற்றங்குணங்களைத் தெரிவிப்பாராயின் எமக்கு அது தளர்வில்லா ஊக்கம் தரும்.

இங்ஙனம் பணிவுள்ள,

குகையூர். திரு. அடிகளாசிரியன்



உ

# வீரசைவப் பிரமாணம்.

1. வாதுளாகமத்தில், உத்திர காண்டத்திலே தந்திரோத்திரப் பிறிதீபிகையிலும், அதர்வண வேதத்திலும் இறைவனால் இறைவிக்குக் கூறப்பட்ட சிவ சித்தாந்த தத்துவம் எப்படி என்றால் :—

2. சகல பிரபஞ்சங்களுக்கும், சதுர்த்தெச புவனங் களுக்கும், சராசரங்களுக்கும் மற்றவைகளுக்கும் இடங் கொடுப்பதும் இலயம் செய்வதுமாகிய இவைகளுக்கு ஏது வாயிருக்கும் வெளிதானே பரசிவத்தலமாம்.

3. இப்படி யிருக்கின்ற பரசிவத் தலத்துடனே அவக்த்தமாய்க் கூடியிருந்த சத்தியினாலே செகவுற்பத்திக் காரணமாக, சிவமாகியதலம் இரண்டு வகை ஆயிற்று. ஒருவகை இலிங்கமென்றும் மற்றொருவகை அங்கமென்றுங் கூறப்படும். இலிங்கமென்றதே சிவத்தலம்; அங்கமென்றதே சீவத்தலம்.

4. இங்ஙனம் பரசிவத்தலம் இரண்டு வகையாகை யினாலே அத்துடன் கூடியிருந்த சிவசம்மான சத்தியும் இரண்டு வகையாய், ஒன்று இலிங்கத்திலேயும் மற்றொன்று அங்கத்திலேயுமாய் விளங்கியிருக்கும்.

5. இலிங்கத்திலே கூடியிருந்த சத்தியே கலையென்று சபித்துக் கொண்டிருக்கும். அங்கத்திலே கூடியிருந்த சத்தியே பத்தி யென்று சபித்துக்கொண்டிருக்கும். இலிங்கமே சிவம், அங்கமே சிவ சமமான ஆத்மா.

6. இலிங்கத்திலே இருக்கிற சத்தியே சகல பிரபஞ்சமாகச் சகலத்தையும் உண்டாக்கி யிருக்கும். அங்கத்திலே கூடியிருக்கிற சக்தி என்னும் பத்தியே பிரபஞ்சமெல்லாவற்றையும் இலயம் பண்ணிக்கொண்டிருக்கும்.

7. எல்லாப் பிரபஞ்சங்களும் கூடுகையினாலே 'லி' என்றும், அதற்குள்ளே கமனம் பண்ணுவதால் 'ங்க' என்றும் சொல்லப்பட்டது. ஆகையினால் இலிங்கமென்று பெயராயிற்று. அகாரத்துக்கு முதற்காரணமான நாதப் பிரமம் யாதொன்றிலே அடங்கிற்று; யாதொன்றிலே தோன்றிற்று; அதுவேஅங்கமென்று பெயரமையப்பெற்றது.

8. இனி இலிங்கம் என்கிறதே மூன்று வகைப்படும். அவை யாவையெனின், பாவலிங்கம் பிராணலிங்கம் இஷ்டலிங்கம் என்பனவாம். அவற்றுள் பாவலிங்கம் தோன்றா உருவாய் அறிவென்னும் பொருளுக்குத் தோற்றிக்கொண்டிருக்கும். பிராண லிங்கம் தோன்றித் தோன்றா உருவாய் மனதென்னும் பொருளுக்குத் தோற்றிக் கொண்டிருக்கும். இட்டலிங்கம் தோன்றும் உருவாய் இட்டத்தைக்கொடுத்து அநிட்டத்தை நீக்கிக்கொண்டு கண்ணுக்குத் தோற்றிக் கொண்டிருக்கும்.

9. பாவலிங்கமே அறிவு அல்லது ஞானம் என்கிற பொருள். பிராண லிங்கமே மந்திரம் அல்லது ஒலி உருவமான பொருள். இட்டலிங்கமே கிரியை அல்லது செய்கை உருவமான பொருள்.

10. இவ்வண்ணம் இருக்கின்ற மூன்று இலிங்கங்களுக்கும் அங்கமும் மூன்று வகையாம். அவை யோகாங்கம் போகாங்கம் தியாகாங்கம் என்பன.

11. அவற்றுள், யோகாங்கம் அறிவென்னுங் காரணமாய் பாவலிங்கத்திற்கு இடமாய் விளங்கும். போகாங்கம் மனமென்னும் சூக்குமமாய் பிராணலிங்கத்திற்கு இடமாய் விளங்கும். தியாகாங்கம் உடலென்னும் தூலமாய் இட்டலிங்கத்திற்கு இடமாய் விளங்கும்.

12. இனி ஜீவரும் மூன்று வகையாம். பரமாத்மா அந்தராத்மா ஜீவாத்மா என்று.

13. யோகாங்கமான காரணங்கத்தில் எழுந்தருளியிருக்கும் பரமாத்மாவுக்கு பிராஞ்ஞனென்றும், போகாங்கமான சூக்குமாங்கத்தில் வீற்றிருக்கும் அந்தராத்மாவுக்கு தைசசன் என்றும், தூலாங்கத்தில் ஒன்றியிருக்கும் ஜீவாத்மாவுக்கு விசுவன் என்றும் பெயர் கூறப்படும்.

14. இனி இலிங்கங்களென்ற மூன்று வகையும் ஒவ்வொன்று இவ்விரண்டாய் ஆறு லிங்கமாயின. அஃதேதெனின், பாவலிங்கம் என்கிறதே மகாலிங்கம் பிரசாத லிங்கம் என இருவகையாகியும், பிராணலிங்கம் என்கிறதே சங்கம லிங்கம் சிவலிங்கம் என இருவகையாகியும், இட்ட லிங்கம் என்பதே குருலிங்கம் ஆசாரலிங்கம் என இருவகையாகியும் ஆயிற்று என்பது.

15. இலிங்கமானது அறுவகையாகவே இலிங்கத்தினது கலாரூபமான சத்தியும் அறுவகையாயிற்று. அஃதேதெனின், மகாலிங்கத்தினது சாந்தியாதீதோத்தர கலையே சிற்சத்தி என்றும், பிரசாதலிங்கத்தினது சாந்தியாதீதகலையே பராசத்தியென்றும், சங்கமலிங்கத்தினது சாந்திகலையே ஆதி சத்தியென்றும், சிவலிங்கத்தினது வித்யாகலையே இச்சா சத்தியென்றும், குருலிங்கத்தினது பிரதிட்டாகலையே ஞான

சத்தியென்றும், ஆசாரலிங்கத்தினது நிவர்த்திகலையே கிரியா சத்தியென்றும் கூறிக்கொண்டிருந்தன.

16. இத்தகையனவாகிய இலிங்கங்களுக்கு இடமேதெனில், மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை என்பனவாம். அவைகளில் இலிங்கங்கள் நிற்கும் வகை யாங்ஙனமெனிற் கூறுவோம்:—

17. ஆக்கினையில் மகாலிங்கம் சிற்சத்தியுடன் கூடியிருக்கும். இதன் அக்கரம் ஓங்காரம். விசுத்தியில் பிரசாதலிங்கம் பராசக்தியுடன் சேர்ந்து நிற்கும். இதன் அக்கரம் யகாரம். அநாகதத்தில் சங்கம லிங்கம் ஆதிசக்தியுடனணைந்திருக்கும். இதன் அக்கரம் வகாரம். மணிபூரகத்தில் சிவலிங்கம் இச்சாசத்தியுடன் ஒன்றியிருக்கும். இதன் அக்கரம் சிகாரம். சுவாதிட்டானத்தில் குருலிங்கம் ஞானசக்தியுடன் இணைந்திருக்கும். இதன் அக்கரம் மகாரம். மூலாதாரத்தில் ஆசாரலிங்கம் கிரியாசக்தியுடன் கூடியிருக்கும். இதன் அக்கரம் நகாரம்.

18. இப்படி இருக்கின்ற இலிங்கத்திற்கு முன் சொன்ன மூன்றுவகை அங்கமும் ஆறுவகையாய் இடமாகும். எங்ஙனமெனில், யோகாங்கத்தில் ஐக்கியாங்கமென்றும் சரணாங்கமென்றும், போகாங்கத்தில் பிராணலிங்காங்கமென்றும் பிரசாதாங்கமென்றும், தியாகாங்கத்தில் மயேச்சுராங்கமென்றும் பத்தாங்கமென்றும் இவ்விரண்டு வகையாயின.

19. இங்ஙனம் ஓதப்பட்ட அயிக்யாதி ஆறு அங்கங்களிலும் முறையே உயிர், வெளி, கால், தீ, நீர், மண் என்னும் ஆறு பொருள்களும் தோன்றின.

20. இலிங்கத்திலே உறைந்த சக்தி ஆறுவகை யாயினாற்போல, அங்கத்திலே இருந்த சத்தியும் பத்தி யென்னும் பெயரால் சமரச பத்தி, ஆனந்த பத்தி, அநுபவ பத்தி, அவதான பத்தி, நயிட்டா பத்தி, சற்பத்தி என அறுவகையாயிற்று.

21. இப்பத்திகளை நிலைவுடைய பத்தவர்க்கங் களுக்கு முறையானே ஐக்கியன், சரணன், பிராணலிங்கி, பிரசாதி, மயேச்சுரன், பத்தன் என்று பெயர்.

22. இங்ஙனம் ஆகையினாலே பரசிவ மூர்த்திதானே தன்னுடைய பூச்சிய பூசக பாவகத்திலே, தானே இலிங்கமும் அங்கமும் ஆயினானென்று வீரசைவ சித்தாந்தப் பெரியோர் கூறுவர்.

23. பூச்சிய பூசகராக எழுந்தருளியுள்ள பரசிவப் பிரபுவே, ஆசாரிய மூர்த்தியாய் எழுந்தருளி பக்குவாங்கத் திற்குத் 'திரும்பாலயம்' செய்து வைப்பதையே தீக்ஷை என்று வழங்கப்படும்.

24. 'தீ' என்பது மலக்கூட்டம் 'க்ஷை' என்பது க்ஷயம் பண்ணுவித்தல். 'தீக்ஷை' என்னுஞ் சத்தம் அத்தொழிலையுடைய ஆசிரியருக்குத் 'தேசிகன்' என்று பெயர் தந்தது.

25. பரசிவனாயிருக்கின்ற இலிங்கமும், பரமாத்மனா யிருக்கின்ற அங்கமும் ஆகிய இரண்டுக்கும் கர்த்தாவான, பரசிவப் பிரபுவாகிய, ஆசாரிய மூர்த்தியே மேற்கூறிய இரண்டனையும் ஒன்றாக யோகம் பண்ணினதே இலிங்காங்க சையோகம்.

26. வேதமுடிவிலே, தத்துவமசி மகாவாக்கியத்தாலே ஆசாரியர் சிவ சீவ ஐக்கியம் செய்தார். அதுவே பிரத்யட்சமாய் தத்பதமான இலிங்கமென்னுஞ் சிவனையும், துவம்பதமான அங்கமென்னுஞ் சீவனையும், அசிபதமாகிய ஐக்கியம் என்னுங் கூட்டுறவினாலே ஆன இலிங்காங்க சையோகமே சிவ சீவ ஐக்கியமென்று திருவுளம் பற்றினார்.

27. இனி சச்சிதானந்த மென்னும் பதார்த்தம் யாதெனின், சத்துப்பொருளே சிவன் என்னும் இலிங்கம், சித்துப்பொருளே சீவன் என்னும் அங்கம், இரண்டும் சையோகமாதலே ஆனந்தம்.

28. சீவனுள்ளே எழுந்தருளியுள்ள நிட்கள சிவாமிசமான ஆசாரியன், தம்முடைய நிசபாவமாகிய அத்தத்தாலே எடுத்து, மனதென்கிற அத்தத்திலே கொடுத்து, தன்னிசபாவமான கரத்திலே பிடித்து இலிங்கத்துள்ளே நிச்சயித்துப் பிரதிட்டை பண்ணியருளினார்; இதுவே இலிங்காங்க சையோகம்.

29. அஃதெப்படி எனின், பண்டு இறைவன் முப்புரங்களை ஒரேகாலத்தில் எரித்தவாறு போல, இறைவனே ஈண்டு ஆசாரியனாய்வந்து, தனுத்திரயத்தில் ஏகதமாய் அநாதியே கூடியுள்ள மலத்திரயங்களை மூவகைத்தீக்கையினாற் சுட்டுத் 'திரிபுராந்தகனென்று' நபித்துக்கொண்டார். அன்றியும் முத்தனுவின் கண்ணும் மூவகை இலிங்கங்களை பிரதிட்டை பண்ணியருளினார்.

30. எவ்வண்ண மெனின், காரண தனுவிலே இருந்த ஆணவமலத்தை வேதா தீக்கையினாலும், சூக்குமதனுவிலே இருந்த மாயாமலத்தை மந்திர தீக்கையினாலும்

னால் தனுவிலே இருந்த கன்மமலத்தை கிரியா தீக்கையி னலுஞ் சுட்டு, முறையே மூன்றிடத்தும் பாவப், பிராண, இட்டலிங்கங்களை பிரதிட்டை செய்தார் என்பது.

31. இலிங்கம் அங்கத்திலே சுப்பிர திட்டிதமாய் குரு அநுமதியினலே பிரசன்னமாயிருக்கும். அங்கத்திலே பிரதிட்டை செய்த இலிங்கம், சர்வாங்கத்திலேயும் ‘படிக்கக் கடத்துள்ளே வைத்த விளக்குப்போல்’ அகமும் புறமும் விளங்கியிருக்கும்.

32. அஃதெப்படி எனின், நெஞ்சிலே மகாலிங்கமும், நாசியிலே ஆசாலிங்கமும், நாவிலே குருலிங்கமும், கண்ணிலே சிவலிங்கமும், உடம்பிலே சங்கமலிங்கமும், செவியிலே பிரசாதலிங்கமுமாய் விளங்கியிருக்கும்.

33. இப்படி அங்கத்தின்கண் பிரதிட்டை பண் ணின ஏகலிங்கமே ஆறுதலத்தின் கண்ணே விளங்கி ஆறுகுணங்களாயிருக்கும். யாங்ஙன மெனின், பூமிக்கும், நாசிக்கும், கந்தத்திற்கும் பேதமில்லாதபடியினலே, நாசி யிலே பிரதிட்டை பண்ணின ஆசாலிங்கத்திற்கு நாசியே முகமாய், நாசியென்கின்ற ஞானேந்திரியத்திற்கும், குய்யம் என்கின்ற கன்மேந்திரியத்திற்கும் ஆசாலிங்கமே வேரோடி எழுந்தருளியிருக்கும்.

34. நீரும், நாவும், சுவையும், வேற்றுமையில்லாத படியினலே நாவிலே எழுந்தருளச் செய்த குருலிங்கத்திற்கு, நாவே முகமாய், நாவென்ற அறிவுக் கருவிக்கும், குதம் மென்னுந் தொழிற் கருவிக்கும் குருலிங்கமே வேரோடி எழுந்தருளியிருக்கும்.

35. தீயும், கண்ணும், உருவமும், வேற்றுமையில்லாதபடியினாலே, கண்ணிலே எழுந்தருளப்பண்ணின சிவலிங்கத்திற்குக் கண்ணே முகமாய், கண்ணென்னும் அறிவுக் கருவிக்கும் கால் என்னும் தொழிற்கருவிக்கும் சிவலிங்கமே வேரோடி எழுந்தருளியிருக்கும்

36. காற்றும், உடம்பும், ஊறும் வேற்றுமையில்லாதபடியினாலே, உடம்பிலே எழுந்தருளப்பண்ணின சங்கமலிங்கத்திற்கு, உடம்பே முகமாய், உடம்பென்கின்ற அறிவுக்கருவிக்கும், கையென்னுந் தொழிற் கருவிக்கும் சங்கம லிங்கமே வேரோடி எழுந்தருளியிருக்கும்.

37. வானும், செவியும், ஒலியும் வேற்றுமையில்லாதபடியினாலே, செவியில் எழுந்தருளச் செய்த பிரசாதலிங்கத்திற்குச் செவியே முகமாய், செவி யென்னும் அறிவுக் கருவிக்கும், வாய் என்னுந் தொழிற் கருவிக்கும் பிரசாத லிங்கமே வேரோடி எழுந்தருளியிருக்கும்.

38. மனத்திலே எழுந்தருளச்செய்த மகாலிங்கத்திற்கு மனமே முகமாய், ஐந்து அறிவுக்கருவிக்கும், ஐந்து தொழிற் கருவிக்கும் ஒன்றாக மகாலிங்கமே வேரோடி எழுந்தருளியிருக்கும்.

39. இவ்வண்ணம் ஆசிரியனாலேயான மாணாக்கனுக்கு இறைவன், ஆறு பொறிகளே முகமாய், சதாசிவ சொரூபமாய் எழுந்தருளியிருப்பான்.

40. ஒவ்வோரிலிங்கத்திற்கும் முறையே முன் சொன்ன மண் நீர் முதலானவைகள் அர்ப்பிதமாயிருக்கும்.

41. இனி, இலிங்கங்களை யேற்கும் அங்கங்களினது காங்கள் தோன்றினவகையைக் கூறுவோம். அஃதெங்ஙன மெனின,

42. எல்லா வேதாகமங்களும் கொண்டாடத்தக்க தத்துவம் யாதோ அது வஸ்த்து என்று கூறப்படும். அந்த வஸ்த்துவினாலே பாவகம் பிறந்தது. பாவகத்தினாலே ஞானம் பிறந்தது. ஞானத்தினாலே மன்து பிறந்தது. மனதினாலே அகங்காரம் பிறந்தது. அகங்காரத்தினாலே புத்தி பிறந்தது. புத்தியினாலே சித்தம் பிறந்தது. அஃதெவ்விதமெனின் ;

43. வேதாகமம் உண்டென்கிறதே வஸ்த்துபாவம்; வஸ்த்துவைத் தேர்ந்தறிகின்றதே ஞானம்; வஸ்த்துவை நினைக்கிறதே மனது; வஸ்த்துவை உண்டென்கிறதே அகங்காரம்; வஸ்த்துவை நிச்சயிக்கிறதே புத்தி; வஸ்த்துவை நிறுத்திக்கொள்ளுகிறதே சித்தம்; இப்படி அந்தக்காணங்கள் வஸ்த்துவினாலே பிறந்தது.

44. ஆகையினாலே, பூமியே அங்கமான பத்தனுக்கு சித்தமே அத்தம்; நீரே அங்கமான மயேச்சுரனுக்குப் புத்தியே அத்தம்; தீயே அங்கமான பிரசாதிக்கு அகங்காரமே அத்தம்; காற்றே அங்கமான பிராணலிங்கிக்கு மனமே அத்தம்; வெளியே அங்கமான சரணனுக்கு ஞானமே அத்தம்; நெஞ்சே அங்கமான அயிக்கியனுக்குப் பாவகமே அத்தம்.

45. இப்படிச் சுசித்தமென்கிற கையினாலே, மணப்பொருள்களை மூக்கே முகமாயிருக்கின்ற ஆசாலிங்கத்திற்கு சற்பக்தியினாலே நிவேதித்து மேற்படி மணப்பொருள்களைக் கொள்ளுமவனே சற்பத்தன்.

46. சுபுத்தி என்கிற கையினாலே, சுவைப்பொருள்களை நாவே முகமாயிருக்கின்ற குருலிங்கத்திற்கு நயிட்டா பத்தியினாலே நிவேதித்து மேற்படி சுவைப்பொருள்களைக் கொள்ளுமவனே மயேச்சுரன்.

47. நிராங்காரமென்கிற கையினாலே, உருவப் பொருள்களை கண்ணே முகமாயிருக்கின்ற சிவலிங்கத்திற்கு அவதானபத்தியினாலே நிவேதித்து மேற்படி உருவப்பொருள்களைக் கொள்ளுமவனே பிரசாதி.

48. சுமனமென்கிற கையினாலே, ஊறுப்பொருள்களை மெய்யே முகமாயிருக்கின்ற சங்கமலிங்கத்திற்கு அநுபவபத்தியினாலே நிவேதித்து மேற்படி ஊறுப்பொருள்களைக் கொள்ளுமவனே பிராணலிங்கி.

49. சுஞ்ஞான மென்கிற கையினாலே ஒலிப்பொருள்களை செவியே முகமாயிருக்கின்ற பிரசாதலிங்கத்திற்கு ஆனந்தபத்தியினாலே நிவேதித்து மேற்படி ஒலிப்பொருள்களைக் கொள்ளுமவனே சரணன்.

50. சுபாவமென்கிற கையினாலே நிறைவுப்பொருள்களை நெஞ்சே முகமாயிருக்கின்ற மகாலிங்கத்திற்கு சமரச பத்தியினாலே நிவேதித்து மேற்படி நிறைவுப்பொருள்களைக் கொள்ளுமவனே ஐயிக்கியன்.

51. இங்ஙனம் அந்தந்த முகத்துக்கான பொருள்களேயல்லாமல், அந்தந்த முகத்திலே பிறந்த பூதங்களாலே யுண்டான ஐந்துவகைப் பொருள்களும், பின்னை யொரு முகத்திற்குப் உரிமையுடையன வல்ல.

52. அஃதெப்படியென்றால், சத்தியோசாத முகத்திலே பிறந்த நிலத்திலே ஆன மணம் நிலமே முகமான மூக்கிற்கே யுரியது.

வாமதேவ முகத்திலே பிறந்த நீரிலே ஆன சுவை, நீரே முகமான நாவிற்கே யுரியது.

அகோர முகத்திலே பிறந்த தீயிலே ஆனஉருவம், தீயே முகமான கண்ணிற்கே யுரியது.

தற்புருட முகத்திலே பிறந்த காற்றிலே ஆன ஊறு, காற்றே முகமான மெய்க்கே யுரியது.

ஈசான முகத்திலே பிறந்த வெளியிலே ஆனஒலி, வெளியே முகமான செவிக்கே யுரியது.

53. இவ்வண்ணம், அந்தந்த முகத்திற்குச் சமர்ப்பித்து அந்தந்த பிரசாதங் கொள்ளுகையினாலே, இவன், தான் அல்லாதே சிவப்பிரசாத சொரூபனாய் சர்வாங்கமும் இலிங்கமாய் நிர்லேபனாயிருப்பன்.

54. இலிங்கங்களின் சொரூபங்கள் எப்படியிருக்குமென்றால், ஆசாரலிங்கம் பசுமைநிறம்; குருலிங்கம் வெள்ளைநிறம்; சிவலிங்கம் ஒளி நிறம்; சங்கமலிங்கம் பசுமையும் வெள்ளையுங் கலந்த நிறம்; பிரசாதலிங்கம் கருமைநிறம்; மகாலிங்கம் சித்து நிறம்.

55. இலிங்கார்ப்பிதப் பொருள்கள் தூலம், விவிதம், ஆனந்தம் என மூன்று வகையாயிருக்கும்.

இட்டலிங்கத்திற்குத் தூலமென்கிற உருவப்பொருள்களும், பிராணலிங்கத்திற்கு விஷிதமென்கிற சுவைப்பொருள்களும், பாவலிங்கத்திற்கு ஆனந்தமென்கிற அமைதிப் பொருள்களும் அர்ப்பிதமாம்.

வீரசைவப்பிரமாணம்.





# பசவபதம்

(தமிழ் காலாண்டிதழ்)

## சந்தா விவரப் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| வாழ்நாள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. | 1000.00 |
| தமிழ்நாடு பசவசமிதி வாழ்நாள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. | 500.00 |
| நுழைவு கட்டணம் | : | ரூ. | 11.00 |
| வாழ்நாள் உறுப்பினர் பதக்கம் | : | ரூ. | 39.00 |
| மொத்தம் | : | ரூ. | 1550.00 |

குறிப்பு : தொகையை ரொக்கமாகவோ / டிடி மூலமாகவோ தமிழ்நாடு பசவசமிதி அறக்கட்டளை (பதிவு) கோயம்புத்தூர் - 641002 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

# தமிழ்நாடு பசவசமிதி டிரஸ்ட் அலுவலக திறப்பு விழா



கோவையில் தமிழ்நாடு பசவசமிதி அலுவலக தொடக்க விழாவினை
நடத்திவைத்த இளகல் ஸ்ரீ குருமகந்தஸ்வாமிஜி மற்றும் பிற சுவாமிகளுடன்
பசவசமிதி தலைவர் திரு. அரவிந்த் பி. ஜத்தி அவர்கள்

## தமிழ் வெளியீடுகள் :

1. **பசவதத்துவ தரிசனம்** - திரு. த.ஹனுமந்தப்பா ரூ. 100/-
2. **பசவண்ணர் உரையமுதம்** - திரு. த.ஹனுமந்தப்பா ரூ. 50/-
3. **பசவண்ணர் பாட்டமுதம்** - திரு. பாவலர் பொன்னரசு ரூ. 99/-
4. **பசவரின் பொன் மொழிகள்**
   - திரு. சோமசுந்தர ஐயர், திரு. வை. ரத்தின சபாபதி ரூ. 5/-
5. **இஷ்டலிங்கம் - விஞ்ஞானமும் விளைவுகளும்**
   - திரு. த.ஹனுமந்தப்பா (தமிழாக்கம்)
6. **பேரொளி - நடன நாடகம்**
   - திரு. பி.என்.ருத்ரப்பா, திரு. இறையடியான் ரூ. 40/-
7. **வீரசைவப் பிரமானம்** - திரு. அடிகளாசிரியர் ரூ. 10/-
8. **அக்கம்மா தேவி வசனங்கள்**
   - திரு. ஆர்.கே.ஆல்துரை (தமிழாக்கம்) ரூ. 20/-
9. **பசவேஸ்வரின் வாழ்வும் கொள்கைகளும்**
   - திரு. எல். மாதப்பா

---

## குறுந்தகடுகள்

1. **பசவ வசனாம்ருதம் சி.டி.. 1** - டாக்டர். விஜயலட்சுமி ரூ. 50/-
2. **பசவ வசனாம்ருதம் சி.டி.. 2** - டாக்டர். விஜயலட்சுமி ரூ. 50/-
3. **பசவண்ணர் பாட்டமுதம் சி.டி..** - எஸ்.பி.பாலசுப்பிரமணியம் ரூ. 70/-

---

**கிடைக்குமிடங்கள் :**

# பெங்களூரு பசவசமிதி

பசவ பவன், ஸ்ரீ பசவேசுவரர் சதுக்கம், பெங்களூரு - 560 001.
போன் : 080 - 22259400, 22265505

# தமிழ்நாடு பசவசமிதி டிரஸ்ட்

(பதிவுபெற்றது)

115, திருவெங்கடசாமி ரோடு (மேற்கு), ஆர்.எஸ்.புரம்,
கோயம்புத்தூர் - 641002.
போன் : 0422 - 2541231, 2550961